# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2017

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 7

சுட்டெண்: | | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 15 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 5 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. ஒன்று கூடின் வலிமை பெறுவர் என்ற கருத்தை வெளிப்படுத்தும் பழமொழி

அ) அடாது செய்தவர் படாது படுவர்.

ஆ) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.

இ) சிறு துரும்பும் பல் குத்த உதவும்.

ஈ) விளையும் பயிரை முளையிலேயே தெரியும்.

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. முதலெழுத்துகள்

அ) 18 ஆ) 30 இ) 247 ஈ) 216

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. விபுலாநந்த அடிகளாரின் இயற்பெயர்

அ) வரதன் ஆ) இளங்கோ இ) மயில்வாகனன் ஈ) சுப்புரத்தினம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. இலங்கையில் ஈமத்தாழிகள் கண்டெடுக்கப்பட்ட இடங்களில் ஒன்று

அ) குஞ்சுப்பரந்தன் ஆ) சிலாபம்

இ) மன்னார் ஈ) நல்லூர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. பாம்பைக் கண்ட சிறுவனின் நெஞ்சம் ________________ என அடித்தது.

அ) மடமட ஆ) படபட இ) கடகட ஈ) தடதட

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. பின்வருவனவற்றில் நீர்ச்செடி அல்லாதது

அ) கொட்டி ஆ) ஆம்பல் இ) தாமரை ஈ) மல்லிகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. மதியின் வரவைக் கண்டு பொங்குவது

அ) கடல் ஆ) ஆறு இ) குளம் ஈ) ஏரி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. பின்வருவனவற்றுள் வினா எழுத்து

அ) உ ஆ) இ இ) ஐ ஈ) ஏ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. எல்லாளன் காலத்தில் அநுராதபுரத்துக்குத் தெற்கே ____________ தமிழ்ச் சிற்றரசுகள் நிலவின.

அ) முப்பத்திரண்டு ஆ) முப்பது

இ) இருபத்திரண்டு ஈ) இருபது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. சிலப்பதிகாரக் கதை முடிவுறும் நகரம்

அ) பூம்புகார் ஆ) வஞ்சிமாநகர்

இ) தஞ்சைமாநகர் ஈ) காவிரிப்பூம்பட்டினம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. உயர்திணைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) நூல் ஆ) ஆடியது இ) வரைந்தான் ஈ) கொக்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. கயிலைவன்னியனுடன் நட்புப் பூண்டிருந்த கண்டி மன்னன்

அ) மருதுபாண்டியன் ஆ) குத்திகன்

இ) இரண்டாம் இராசசிங்கன் ஈ) சேனன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. அமுதத் தமிழ்மொழி வடிவாக சேர மன்னனைக் காணவந்த புலவர்

அ) சீர்த்தலைச்சாத்தனார் ஆ) பெருந்தலைச்சாத்தனார்

இ) கபிலர் ஈ) மோசிகீரனார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. வெப்பம் என்பதன் எதிர்ச்சொல்

அ) சூடு ஆ) குளிர் இ) இருள் ஈ) ஒளி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. **திலீபன் சிவப்புப் பந்தொன்று வாங்கினான்.**

இச்சொல்லியத்தில் வந்துள்ள அடைமொழி

அ) சிவப்பு ஆ) திலீபன் இ) வாங்கினான் ஈ) பந்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. பெங்சூற்றர் என்னும் கோட்டை அமைந்துள்ள இடம்

அ) ஆனையிறவு ஆ) மன்னார்

இ) வெற்றிலைக்கேணி ஈ) திருகோணமலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. பின்வருவனவற்றுள் அடுக்குத்தொடர்

அ) நறநற ஆ) புறுபுறு இ) குளுகுளு ஈ) ஊர்ஊர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. அசேலனை வெற்றி கொண்ட தமிழ் மன்னன்

அ) சேனன் ஆ) எல்லாளன் இ) குத்திகன் ஈ) சங்கிலியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. துளைக்கருவிகளில் ஒன்று

அ) யாழ் ஆ) தண்ணுமை இ) புல்லாங்குழல் ஈ) தாளம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. வன்னிப் பெருநிலப்பரப்பு தமிழர் பகுதியாகும். இச் சொல்லியம்

அ) ஏவல் ஆ) கூற்று இ) வினா ஈ) மெய்ப்பாடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. தீயைச் சினத்திற்கு உவமையாகக் கூறியவர்

அ) வள்ளுவர் ஆ) ஔவையார்

இ) சிவப்பிரகாச அடிகள் ஈ) விபுலாநந்த அடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. **துஞ்சு மேதி சுறாக்களைச் சீறச்..........** இப்பாடலில் மேதி என்பது

அ) ஆண்யானை ஆ) பெண்மான் இ) பெண் எருமை ஈ) பெண்யானை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. **சென்றிலன்** என்பது

அ) பெயரெச்சம் ஆ) எதிர்மறை இ) உடன்பாடு ஈ) வினையெச்சம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. தமிழுக்குத் தொண்டு செய்த இத்தாலி நாட்டு அறிஞர்

அ) வீரமாமுனிவர் ஆ) கோமர் இ) சுவைட்சர் ஈ) வெர்சில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. சுட்டெழுத்துகள்

அ) மூன்று ஆ) ஐந்து இ) நான்கு ஈ) இரண்டு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. **நாங்கள் + உடன்** என்பதைச் சேர்த்து எழுதினால்

அ) உங்களுடன் ஆ) உன்னுடன் இ) நாங்களுடன் ஈ) எங்களுடன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. கோவலன் கொலைக்கு ஏதுவாக அமைந்தது

அ) மணிமேகலை ஆ) வளையல் இ) சிலம்பு ஈ) குண்டலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. சிறுகோலால் உலகை ஆழ்பவர்

அ) உழவர் ஆ) அரசர் இ) புலவர் ஈ) அறிஞர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. சொல்லியத்தின் முதன்மையான உறுப்புகள்

அ) எழுவாயும் பயனிலையும் ஆ) பயனிலையும் அடைமொழியும்

இ) எழுவாயும் அடைமொழியும் ஈ) செயப்படுபொருளும் அடைமொழியும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. சேனன், குத்திகன் ஆகிய தமிழ் மன்னர்களது தலைநகரம்

அ) பொலநறுவை ஆ) உருகுணை இ) வன்னி ஈ) அநுராதபுரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. தமிழுக்குத் தொண்டு செய்தால் அந்தத் தமிழ் உள்ளளவும் வாழ்வோம் என்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

______________________________________________

______________________________________________

2. வன்னியில் கயிலைவன்னியனின் பேரரசாக மதிக்கப்பட்ட அரசு எது?

______________________________________________

______________________________________________

3. ஏழிசை பற்றிய செய்திகள் குறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் காணப்படும் இடங்களின் பெயர்கள் இரண்டைத் தருக.

______________________________________________

______________________________________________

4. வீரபாண்டிய கட்டப்பொம்மன் யாருடைய படை உதவியுடன் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டான்?

______________________________________________

______________________________________________

5. ***அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை***
   ***ஒழுக்க மிலான்க ணுயர்வு***

   இக் குறளின் பொருளை எழுதுக.

______________________________________________

______________________________________________

6. விசயன் காலத்துக்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்த தமிழ் மரபினர் யாவர்?

______________________________________________

______________________________________________

7. விருந்தோம்பல்பற்றிக் கூறும் நூல்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

## 3) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழு விடை தருக.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தைப்பொங்கல் நாளில் இராசேந்திரசோழன் தன் படைகளோடு காவேரியில் நீராடியதாகக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இதனை வரலாற்று ஆய்வாளர் குடைவாயிற் சுப்பிரமணியம் என்பவர் கூறியுள்ளார். அது மட்டுமன்றிக் கர்நாடக மாநிலத்தில் இராசேந்திரசோழனால் கட்டப்பட்ட சிவாலயம் ஒன்று உள்ளது என்றும் கூறியுள்ளார். இச் சிவாலயத்தின் தீர்த்தத் துறைக்கு வலம்புரித்தீர்த்தம் என்று பெயர் இடப்பட்டுள்ளது. இக் கோவில் சிறப்புப் பெறுவதற்கு இராசேந்திரசோழன் நன்கொடைகளை வழங்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது. இது போல் வங்க தேசத்தை வென்றெடுத்த இராசேந்திரசோழன் கங்கை நீரை எடுத்துத் தமிழகம் கொண்டு வந்தான் எனவும் சான்றுகள் கூறுகின்றன. மூலகங்கை, பகீரதி என்றெல்லாம் கங்கையாறு அழைக்கப்பட்டது. கங்கை, சரசுவதி, யமுனை என்ற மூன்று ஆறுகளும் இணையும் இடம் திருவேணிசங்கமம் என்று அழைக்கப்படுகிறது. கங்கை நீரைத் தமிழகத்துக்குக் கொண்டுவந்த பெருமை சோழமன்னனுக்கே உரியது.

1. கங்கை நீரைத் தமிழகம் கொண்டுவந்த மன்னன் யார்?

___________________________________________

___________________________________________

2. கங்கை, சரசுவதி, யமுனை என்ற மூன்று ஆறுகளும் இணையும் இடம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

___________________________________________

___________________________________________

3. இராசேந்திரசோழன் எந்நாளில் காவேரியில் நீராடியதாகக் கூறப்படுகிறது?

___________________________________________

___________________________________________

4. எம் மாநிலத்தில் இராசேந்திரசோழனால் சிவாலயம் கட்டப்பட்டது?

___________________________________________

___________________________________________

5. இங்கு குறிப்பிடப்பட்ட வரலாற்று ஆய்வாளர் யார்?

___________________________________________

புள்ளிகள் 10

## 4) இலக்கண - மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வரும் வினைமுற்றுகளின் வினையடி, வினையெச்சம், பெயரெச்சம் என்பவற்றைத் தருக.

| வினைமுற்று | வினையடி | வினையெச்சம் | பெயரெச்சம் |
|---|---|---|---|
| கற்றான் | | | |
| குடித்தன | | | |

2. கீழ்வரும் சொற்களின் எதிர்ப்பாற் சொற்களைத் தருக.

அரசன் ____________ புலவன் ____________

இடையன் ____________ இறைவன் ____________

தந்தை ____________ உழவன் ____________

3. அ. வேற்றுமைகள் எத்தனை?

____________________________

ஆ. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

முதலாம் வேற்றுமை ____________________

மூன்றாம் வேற்றுமை ____________________

4. அ. மாறுபடுபுணர்ச்சி எத்தனை வகைப்படும்?

____________________________

ஆ. பின்வருவன எவ்வகைப்புணர்ச்சி.

தமிழிசை ____________________

நீலவானம் ____________________

5. பின்வரும் சொற்களின் பொருள் விளங்குமாறு ஒவ்வொரு சொல்லியம் எழுதுக.

1. உறக்கம் ____________________

2. வறுமை ____________________

புள்ளிகள் 15

5) **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து; கவிதையை முழுமை ஆக்குக.**

# நான்

| பேசி | எதிர்த்து | பிறந்து | வியந்தது | இனத்தின் |
|---|---|---|---|---|

*நான் ________________ வளர்ந்தது பிறதேசம்*

*நான் கற்றுக் கொள்வது பிறமொழியில்*

*நான் ________________ மகிழ்வது தாய்மொழியில்*

*நான் கேட்டுச் சிலிர்த்தது தமிழ்வீரம்*

*நான் படித்து ________________ தமிழ்மொழியை*

*நான் பார்த்துத் துடித்தது எம் ________________ நிலையை*

*நான் ________________ நிற்பது தமிழ்ப் பகையை*

*நான் மீட்க நினைப்பது என் தாயகத்தை*

புள்ளிகள் 10

**6. பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.**

Vand er det vigtigste for menneskets overlevelse i verden. Vi får det nødvendige vand fra flod, sø og brønd. Vi kan ikke overleve uden vand. Al liv vil uddø uden mad. Solen hjælper os med at få vand.

Human need water to live in this world. We can obtain water from the river, pond and well. If there is no water we won't be able to live. Living things will die without food. In order to live the Sun gives us water.

Pour que l'homme survive sur terre, l'eau est indispensable. Nous nous procurons de l'eau, d'un lac, d'une rivière, d'un puit. Sans eau, nous ne pouvons pas survivre. Les êtres-vivants peuvent mourir sans être alimenté. Pour que nous puissions survivre, ce qui nous aide, c'est le soleil.

Um auf dieser Welt zu überleben, benötigt der Mensch Wasser. Das für uns benötigte Wasser besorgen wir uns aus dem Fluss, See, Brunnen oder ähnlichem. Wenn wir kein Wasser bekommen würden, könnten wir nicht überleben. Lebewesen sterben ohne Nahrung aus. Die Sonne hilft uns zum Überleben, indem sie uns das Wasser gibt.

Water is nodig om een mens in leven te houden. Het nodige water halen we uit een waterput, rivier en uit een sloot. Zonder water kunnen we nooit leven. Zonder voedsel overlijden de zielen. De zon geeft ons water om in leven te blijven.

Tra le fonti di essenziale necessità per l'uomo vi è l'acqua. L'acqua a noi necessaria la possiamo ricavare da fiumi, laghi e pozzi. Non possiamo vivere senza acqua. Gli esseri viventi non vivono senza cibo. Il sole ci permette di vivere dandoci l'acqua.

Vann er den viktigste kilden til mennekselivet her på jorda. Det vannet vi trenger, får vi fra innsjøer,elver og brønner. Uten vann kan vi ikke overleve. Uten mat vil det ikke eksistere noe liv på jorda. Sola er med på å gi vannet som er nødvendig for livet.

För att människan ska kunna leva på jorden krävs vatten. Vi tar det vattnet som vi behöver från sådana ställen som sjön, dammar och brunn. Om vi inte får vatten kan vi inte leva. Utan mat utrotas organismer. För att vi ska leva är det solen som är hjälpsam och ger oss vatten.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- விபுலாநந்த அடிகள்
- நீர் செல்ல விரும்பும் சுற்றுலா. ஏன்?
- உந்துகள்

  உந்துகளால் ஏற்படும் நன்மைகள், தீமைகள்.

புள்ளிகள் 20